# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2018 செப்டெம்பர் மாதம் 18 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை**

**III.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**IV.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**V.** **மனுக்கள்**

**VI.** **கேள்விகள் / இடைக்கால கேள்விகள்**

**01.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம்** 2018.09.04 **ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)18/49)**

அ. பட்ட பின் படிப்புக் கல்வி டிப்ளோமா பாடநெறியைக் கற்கும் ஆசிரியர்களுக்கு அப் பாடநெறிக்கான கட்டணங்களில் அரைவாசியைச் செலுத்த மாகாண சபையினால் இதற்கு முன்னர் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளனவா என்பதை நீங்கள் சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஆ. அவ்வாறு இல்லாதவிடத்து சில கல்வி வலயங்களில் ஆசிரியர்களுக்காக அந்த படி செலுத்தப்படுவதில்லை என்பதனை ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

இ. விஷேடமாக பிலியந்தலை கல்வி வலயத்தில் எதன் அடிப்படையில் இக் கொடுப்பனவு 2006 தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவிப்பீர்களா ?

ஈ. வினைத்திறன் மிக்க சேவை ஒன்றுக்காக செலுத்தப்படும் இந்த நிதியினைப் பெற்றுக் கொடுப்பதற்காக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது என்பதனை சபைக்கு அறிவிப்பீர்களா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**02.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளீர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம்** 2018.09.04 **ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)18/50)**

அ. ஆளுங்கட்சியின் பிரதான ஏற்பாட்டாளர், சபாநாயகர், எதிர்க்கட்சியின் பிரதான ஏற்பாட்டாளர் பதவிகளுக்காக உறுப்பினர் ஒருவருக்கு மேலதிகமாக வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் அந்தந்த பதவிகளுக்கு இணங்க யாவை ?

ஆ. அப் பதவிகள் சிறப்புரிமைகள் மற்றும் வசதிகளுக்காக மாதாந்தம் செலவு செய்யப்பட்ட நிதியை பதவிகளின் அடிப்படையில் வெவ்வேறாக குறிப்பிட இயலுமா ?

இ. அப் பதவிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களும் கடமைகளும் யாவை ?

- சபை ஒத்திவைக்கும் வேளையில் கேட்கப்பட்ட கேள்வி

**03.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் 2018.09.04 ஆந் திகதி சபை ஒத்திவைக்கும் வேளையில் கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)18/ADG - 05)**

அ. மேல் மாகாண சபையின் புதிய கட்டடத்தின் சபை மண்டபத்திற்கு தவிசாளர் வருகை தரும் பிரதான கதவுக்காக செலவாகிய மொத்த நிதி எவ்வளவு ?

ஆ. அக் கதவிற்காக வேறாக மதிப்பீடொன்று காணப்படுகின்றதா ? அதன் நிதி எவ்வளவு ?

இ. அக் கதவினை தயாரிப்பது கேள்வி ஒழுங்கு விதிக்கு இணங்கவா ஒப்படைக்கப்பட்டது ?

ஈ. அதற்கிணங்க கதவினை தயாரிப்பதற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்ட தாபனம் எது ? எந்த விலை மனுவினை முன்வைத்திருந்தனர் ?

உ. கதவினை செய்த தாபனம் எது ?

**04.** **கௌரவ சுனில் வடகல உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/54)**

அ. ஒரு வருடமாக பயணத்திலிருந்து அகற்றப்பட்ட பஸ் வண்டிகளுக்குரிய வீதி அனுமதிப் பத்திரத்தை மீண்டும் போக்குவரத்து அதிகார சபைக்கு பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அவ்வாறு இனங்காணப்பட்ட எத்தனை பஸ் வண்டிகள் 2017 ஆம் ஆண்டு மற்றும் இவ் வருடத்தினுள் இதுவரை காணப்படுகின்றன என்பதனை சபைக்கு முன்வைப்பீர்களா ?

இ. மேலே குறிப்பிட்டவற்றில் இனங்காணப்பட்ட அளவினை வீதிகளுக்கு இணங்க வகைப்படுத்தும் ஆவணத்தின் மூலம் சபைக்கு சமர்ப்பிக்க இயலுமா ?

ஈ. அவ்வாறு இனங்காணப்பட்ட அனுமதிப் பத்திரங்களுக்காக கடைபிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள் யாவை?

உ. அந்த நடவடிக்கை ஒழுங்கு விதிகளுக்கு புறம்பாக வீதி அனுமதிப் பத்திரங்கள் விற்கப்பட்டிருந்தால் அது தொடர்பாக விசாரணை ஒன்றினை மேற்கொள்வீர்களா ?

**05.** **கௌரவ சுனில் வடகல உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/55)**

அ. மேல் மாகாணத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - 2017 இன் கீழ் செயற்றிட்ட இலக்கம் H-78431164003 இன் மூலம் எச்/29/ஏ/1 நவகம்புர என்ற முகவரியில் மிகேல் ஆரச்சிகே சித்ரா மங்கலிகா என்பவருக்கு ரூபா இருபதாயிரம் (20,000/-) வீடமைப்பு உதவி நிதி ஒன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்தபனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஆ. குறித்த உதவி நிதி அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களை சபைக்கு சமர்ப்பிக்க இயலுமா ?

இ. திருமதி மங்கலிகா அவர்கள் குறித்த நிதிக்காக பொருள் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு கொழும்பு பிரதேச செயலாளர் காரியாலயத்திற்கு சென்ற போது அந்த உதவி நிதி அங்கீகரிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டு அந் நிதி வழங்கப்படவில்லை என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஈ. எவ்வாறான போதும் குறித்த செயற்றிட்ட இலக்கத்தின் கீழ் யாராவது பொருள் உதவியினைப் பெற்றுக் கொண்டுள்ளனரா ?

உ. அவ்வாறு பெறப்பட்டிருந்தால் அதற்காக முழுமையான விசாரணை ஒன்று உங்களினால் மேற்கொள்ளப்படுமா ?

**06.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/56)**

அ. அத்தனகல்ல பிரதேச சபையின் அதிகார பிரதேசத்தின் “கத்தொட காணி” என்ற பெயர் கொண்ட 4 ½ ஏக்கர் பூமிப் பிரதேசத்தை துண்டுகளாக்கி விற்பதற்காக 2012.04.11 ஆந் திகதி வரைபட இலக்கம் 6473G/2012 அங்கீகரிப்பதற்காக அப்போதைய அத்தனகல்ல பிரதேச சபையின் தவிசாளரினால் 8 நிபந்தனைகளைத் தெரிவித்து அந்த நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் மாத்திரம் உரியவர்களுக்கு காணிகளைத் துண்டுகளாக்குவதற்கு அங்கீகாரத்தினை வழங்க முடியும் என எழுத்து மூலமாக அவரினால் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதனை அறிவீர்களா ?

ஆ. அக் காணி இவ்வேளையில் உரிய நிபந்தனை ஒன்று இல்லாது துண்டுகளாக விற்கப்பட்டுள்ளது என்பதனை அறிவீர்களா ?

இ. உரிய காணியினை துண்டாக்கி விற்பதற்காக 2014 ஆம் ஆண்டு அத்தனகல்ல பிரதேச சபையின் தவிசாளரினால் எதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதனை நீங்கள் சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஈ. எந்தவொரு நிபந்தனை ஒன்றினையும் நிறைவேற்றாது அக் காணியினைத் துண்டுகளாக்கி விற்றது தொடர்பாக உரிய தவிசாளருக்கு எதிராக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது என்பதனை சபைக்கு அறிவிப்பீர்களா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**07.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/57)**

அ. மேல் மாகாணத்தின் வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் கொழும்பு 01 காரியாலயத்தில் நிர்வாக உத்தியோகத்தர் பயணம் திரு. பி.என்.எஸ். கருணாசந்திர அவர்களின் செயற்பாடு தொடர்பாக போக்குவரத்து அமைச்சின் கணக்காய்வுப் பிரிவினால் 2018.08.07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட விசாரணை தொடர்பாக வழங்கிய சிபாரிசினை நடைமுறைப்படுத்த எவ்வளவு காலம் எடுக்கும் என்பதனை நீங்கள் இச் சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஆ. இவ் அதிகாரிக்கு எதிராக கணக்காய்வுப் பிரிவினால் வழங்கிய 08 சிபாரிசுகள் தொடர்பாக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது என்பதை சபைக்கு அறிவிப்பீர்களா ?

இ. அவ்வாறு அவ் உத்தியோகத்தரின் நடவடிக்கை தொடர்பாக அவருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதனை சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஈ. இல்லையாயின் ஏன் ?

**08.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/58)**

அ. மேல் மாகாண சபையின் வீதிப் போக்குவரத்து அதிகார சபைக்கு முகாமைத்துவ சுற்றறிக்கைக்கு இணங்க 2012.05.01 ஆந் திகதி தொடக்கம் இதுவரை எவ்வளவு பணியாட்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதனை சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஆ. அச் சுற்றறிக்கைக்கு புறம்பாக எவ்வளவு எண்ணிக்கையான பணியாட்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதனை நீங்கள் சபைக்கு அறிவிப்பீர்களா ?

இ. அச் சுற்றறிக்கைக்கு புறம்பாக ஆட்சேர்க்கப்பட்ட பணியாட்களுக்காக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஈ. அச் சுற்றறிக்கைக்கு புறம்பாக பணியாட்களை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுத்தவர்களுக்கு எதிராக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது என்பதனை சபைக்கு அறிவிப்பீர்களா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**09.** **கௌரவ சரத் பதிரண உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Ïæ/vi**
**(1)18/59)**

அ. மேல் மாகாணத்தின் உள்ளூராட்சித் தாபனங்களுக்காக காபட் இடும் இயந்திரங்கள் கடந்த காலத்தினுள் வழங்கப்பட்டுள்ளன என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அந்த இயந்திரங்கள் வழங்கப்பட்ட உள்ளூராட்சித் தாபனங்கள் யாவை ?

இ. அதற்காக செலவாகிய மொத்த நிதி எவ்வளவு ?

ஈ. அந் நிதியானது ஏதாவது அமைச்சின் நிதியத்தின் மூலமா செலவு செய்யப்பட்டது என்பதனை இக் கௌரவ சபைக்கு தெளிவுபடுத்துவீர்களா ?

உ. கடுவெல மாநகர சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள இந்த இயந்திரங்களின் தற்போதைய நிலைமை யாது ?

ஊ. இச் சிறப்பற்ற செயற்றிட்டத்தின் ஊடாக ஒழுங்கற்ற நிதிப் பாவனை நிகழ்ந்துள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

**10.** **கௌரவ நந்தன பத்மகுமார உறுப்பினரினால் சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளீர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Ïæ/vi**
**(1)18/60)**

அ. மேல் மாகாணத்தின் சுகாதார அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலைகளினுள் இயங்கும் நிலையில் காணப்படும் எக்ஸ்ரே இயந்திரங்கள் மற்றும் ஸ்கேன் இயந்திரங்கள் ECG இயந்திரங்கள் மற்றும் என்டஸ்கொபி இயந்திரங்களின் எண்ணிக்கை யாது ?

ஆ. மேல் மாகாணத்தின் வைத்தியசாலைகளில் மாவட்ட மட்டத்தில் இந்த இயந்திரங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு ?

இ. மேலே குறிப்பிடப்பட்ட இயந்திரங்களில் தற்போது இயங்காத நிலையில் காணப்படும் இயந்திரங்களின் எண்ணிக்கை எத்தனை ?

ஈ. மாவட்ட மட்டத்தில் எத்தனை ?

உ. இந்த இயந்திரங்களை வழங்க தகுதியுள்ள எனினும் வழங்கப்படாத வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

**11.** **கௌரவ நந்தன பத்மகுமார உறுப்பினரினால் சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளீர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Ïæ/vi**
**(1)18/61)**

அ. மேல் மாகாணத்தினுள் மாகாண சுகாதார அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் மொத்த வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. அவற்றில் ஆதார வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

இ. மாவட்ட வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஈ. பிரதேச வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

உ. எல்லைப்புற வைத்தியசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

ஊ. மத்திய மருந்தகச்சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

எ. இவ் வைத்தியசாலைகள் மாவட்ட மட்டத்தில் வெவ்வேறாக எவ்வளவு ?

## VII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## VIII. சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான தகவல்கள்

## IX. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும் / சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான பதில்கள்

## X. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01. கௌரவ சுனில் வடகல அவர்கள்**

புளூமென்டல் குப்பை மேடு, மீதொடுமுல்லை குப்பை மேடு, கரதியான குப்பை மேடு போன்ற குப்பை மேடுகள் கவிழ்ந்ததன் காரணமாக மனித உயிர்கள் மற்றும் முழு சுற்றாடலும் அழிவுக்கு உட்பட்ட வேளையில் அதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய அலுவலகர்கள், தாபனங்கள் அவற்றை தடுப்பதற்கு நிரந்தர தீர்வினை வழங்குவதாகக் குறிப்பிட்டு பல்வேறுபட்ட பிரசாரங்களை மேற்கொண்டனர். மீதொடுமுல்லை குப்பை மேடு, புளூமென்டல் குப்பை மேடு ஆகியவற்றை நகர பூங்காக்களாக மாற்றுவதாக அறிவிக்கப்பட்டது. தற்போது அந்த குப்பை மேடுகள் அவ்வாறே காணப்படுகின்றன. நீண்ட கால வேலைத் திட்டம் ஒன்று இல்லை. களனி கங்கை ஆண்டு முழுவதும் பெருக்கெடுக்கும் போது அதில் மூழ்கும் மக்களுக்கு அச் சந்தர்ப்பத்தில் உணவுப் பொதி, உலர் உணவுப் பொருட்களை வழங்கி தற்காலிக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இவ் எல்லா விபத்துக்களுக்கும் அந்தந்த விடயங்களுக்குரிய அமைச்சு தலையிட்டு நீண்ட கால தீர்வொன்றினை முன்வைக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது. **(பி/vi(1)18/04)**

**02. கௌரவ உபாலி கொடிகார அவர்கள்**

மேல் மாகாணத்தின் கல்வி வலய மட்டத்தில் அமைந்துள்ள விஷேட தேவையுள்ள பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை 182 ஆகுவதுடன், அப் பாடசாலைகளில் கல்வி கற்கும் விஷேட தேவைகள் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை 3713 ஆகும்.

அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் சாதாரண பிள்ளைகளுக்கு ஐந்தாம் தர புலமை பரிசில் பரீட்சையின் பெறுபேற்றின் கீழ் புலமைப் பரிசில் உதவி நிதி ஒன்று, பல்கலைக்கழக மாணவர்களுக்கு மஹபொல புலமைப்பரிசில் மூலம் புலமைப் பரிசில் நிதி ஒன்று வழங்கும் முறை ஒன்று காணப்பட்ட போதும் விஷேட தேவையுள்ள பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் உதவி ஒன்றினை பெற்றுக் கொடுக்கும் முறை ஒன்று இல்லை.

மேல் மாகாணத்தின் விஷேட தேவையுள்ள பிள்ளைகளுக்காக, கல்வியினை பெற்றுக் கொடுக்கும் பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளை ஊக்கப்படுத்துவதற்காக அப் பிள்ளைகளுக்கு கல்வி நடவடிக்கைகளுக்காக ஏதாவது படி ஒன்று அல்லது உதவி நிதி ஒன்றினை வழங்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகின்றது. **(பி/vi(1)18/05)**

## XI. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

**2018.09.05** ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.